நாள்.16.10.2024

**அசல் வழக்கு எண். 54/2021**

பெயர் - ராமையா

த/பெ - சின்னதம்பி

**வா.சா.2 - 1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு எத்தனை செண்ட் நிலத்திற்கு பிரச்சனை நடக்கிறது என்றால் தெரியாது. வழக்கு சொத்து விடங்கன் சேர்வையால் கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன். எந்த வருடம் அவர் கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது. சுமார் 50 வருடமாக கிரையம் வாங்கி அனுபவம் செய்து வருகிறார். விடங்கன் சேர்வையின் வாரிசுகள் எவ்வளவு பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. விடங்கன் சேர்வைக்கு மொத்த எவ்வளவு சொத்து உள்ளது என்றால் தெரியாது. விடங்கன் சேர்வையின் தம்பி பெயர் நடேசன் சேர்வை என்றால் சரிதான். நடேசன் சேர்வைக்கு 4 பிள்ளைகள். 1,2 பிரதிவாதிகள் நடேசன் சேர்வையின் மகன்கள். விடங்கன் சேர்வையும், நடேசன் சேர்வையும் பாகம் பிரித்துக்கொண்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரச்சனைக்குறிய வழக்கு சொத்தை விடங்கன் சேர்வையும், நடேசன் சேர்வையும் எவ்வளவு பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ஜெயசந்திரன் பாகம் பிரித்துக்கொண்டு வேறு இடத்திற்கு சென்றுவிட்டார் என்றால் ஆமாம். கல்யாணசுந்தரம் என்பவர் அவர் பாகத்தில் குடியிருக்கிறார் என்றால் இல்லை. கல்யாணசுந்தரம் அவர் பாகத்தில்தான் குடியிருந்துவருகிறார். கதவு எண்.3/66/1 என்ற முகவரியின் வசித்து வருகிறார் என்றால் ஆமாம். ஒரே வீட்டில் இருந்து பிரிந்து வந்துவிட்டார். விடங்கன் சேர்வை வீட்டிலிருந்து பிரிந்து தனியாக கொட்டகை அமைத்து வீடு கட்டி வசித்து வருகிறார். கதவு எண்.3/66/1 என்ற முகவரிக்கு பக்கத்தில் தேவகி என்ற ஒரு மனநிலைபாதிக்கப்பட்ட பெண் மற்றும் அவருடைய தாயார் லெட்சுமியும் வசித்து வந்தார்கள் என்றால் ஆமாம். அந்த வீட்டின் கதவு எண்.3/67/1. அவர்கள்

இறந்தபிறகு இறந்தவர்கள் வீட்டில் 2ம் பிரதிவாதி பட்டுப்பூச்சி வளத்தார் என்றால் இல்லை. எனக்கு விபரம் தெரியவில்லை . அங்குதான் பட்டுப்பூச்சி வளர்த்தார் என்றால் இல்லை. விடங்கன் சேர்வையும், நடேசன் சேர்வையும் பாகம் பிரித்துக்கொண்டு அவர்களிடமிருந்து பிரதிவாதிகள் பாகம் பிரித்துக்கொண்டு அவர் அவர்கள் அவர்களுடைய பாகத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் ஆமாம். நான் இலங்கையிலிருந்து 1970 ல் இந்தியாவிற்கு வந்தேன். 1949 ல் விடங்கன் சேர்வை தாவா சொத்தை கிரையம் வாங்கி 1953 ல் விடங்கன் சேர்வையும், நடேசன் சேர்வையும் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. விடங்கன் சேர்வை வாங்கிய இடத்தில் கீழ்-மேலாக வீடு கட்டி மேல்பகுதி விடங்கன் சேர்வையும், கீழ்புறம் நடேசன்சேர்வையும் வசித்து வந்தார்கள் என்றால் ஆமாம். பிறகு அந்த வீடு சேதம் அடைந்தபிறகு தனித்தனியாக வசித்துவந்தார்கள் என்றால் ஆமாம். நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**6,7,10 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
*by him/her to be Correct.*

Sd/- S.Kavipriya.,B.A.,L.L.B.,
District Munsif, Pattukkottai.